### தமிழ்நாட்டிற்குத் துரோகம் செய்யும் பா.ஜ.க. – அ.தி.மு.க. கூட்டணியை தோலுரித்துக் காட்ட வேண்டும்!

# தி.மு.க.வினர் அனைவரும் ஒரே உணர்வோடு செயல்பட்டு வெற்றிக்கு உழைத்திடுவீர்!

## நெல்லை மேற்கு மாவட்டக் கூட்டத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு! இரா.ஆவுடையப்பன் தலைமை!

நெல்லை.பிப்.12-

நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மேற்கு மாவட்ட கழக அலுவலகம் டாக்டர் கலைஞர் அரங்கத்தில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக துணை பொது செயலாளர் தென் மண்டல பொறுப்பாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் பங்கேற்று 2026 தேர்தல் குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார்.

நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மேற்கு மாவட்ட அலுவலகம் டாக்டர் கலைஞர் அரங்கத்தில் மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில்

தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன்,கே.கே.சி.பிரபாகரன், தொகுதி பார்வையாளர்கள் ஜோசப் ராஜ் (அம்பை) கணேஷ் குமார் ஆதித்தன் (ஆலங்குளம்) மாநில தொண்டரணி துணை செயலாளர் ஆவின் ஆறுமுகம், மாநில விவசாய அணி இணை செயலாளர் அப்துல் காதர்,மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த், மாவட்ட துணை செயலாளர்கள் மைக்கேல், தமிழ்ச்செல்வன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கழக துணை பொதுச்செயலாளர் தென் மண்டல பொறுப்பாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் பங்கேற்று பல்வேறு ஆலோசனை களை வழங்கி உரையாற்றியதாவது.

இங்கு செய்து முடிக்கப்பட்ட பல்வேறு பணிகள் குறித்து தீர்மானங்களை வாசித்தார்கள்.

2026 சட்டப்பேரவை தேர்தலில் முதலமைச்சர் அவர்கள் நாம் செய்ய வேண்டிய பணிகளை பட்டியலிட்டு தந்துள்ளார்கள். அதனால் பிரச்சாரம் செய்ய வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. முதலமைச்சர் அவர்களின் சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்க்க, 'ஸ்டாலினின் மகளிர் படை வெல்லும் தமிழ்பெண்கள் ஒவ்வொரு பூத் வாரியாக செயல்பட வேண்டும். ஒரு பூத்திற்கு 10 பேர் கொண்ட குழுவாகச் இணைந்து அந்தந்த பகுதியில் உள்ள ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று நேரடியாக சந்தித்து நம் சாதனை திட்டங்களை எடுத்துச் சொல்ல வேண்டும்.

வீட்டு உரிமையாளரின் அனுமதியுடன் நமது சாதனைகளை 'ஸ்டிக்கர்' ஒட்ட வேண்டும்.

அதை புகைப்படமாக எடுத்து, இதற்காக உருவாக்கப்பட்டுள்ள பிரத்யேக வாட்ஸ்அப் (Whats App) குழுக்களில் பகிர வேண்டும்.

மக்களுடன் தொடர்ந்து நட்புறவை பேண வேண்டும்.

ஒன்றிய பா.ஜ.க அரசு தாக்கல் செய்த பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு எதுவும் வழங்கப்படவில்லை. முக்கியமாக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை முடக்கும் வகையில் நாடாளுமன்றத்தில் மசோதா கொண்டுவரப் பட்டுள்ளது.

முன்பு மாநில அரசு தீர்மானித்த வேலை நாட்களையும், பயனாளிகளையும்,இனி டெல்லியில் இருந்து முடிவு செய்யும் நிலை உருவாகியுள்ளது. இதனால் கிராமப்புறங்களில் உள்ள 80 சதவீதம் பெண்கள் பாதிக்கப்படுவார்கள்.ஏற்கனவே 100 நாட்களாக இருந்த வேலை வாய்ப்பு இந்த மசோதாவால் 50 நாட்களாவது வேலை கிடைக்குமா?என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

ஒன்றிய அரசு அமெரிக்காவுடன் செய்துள்ள ஒப்பந்தத்தின் மூலம், அங்கிருந்து விவசாயப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டு, உள்ளூர் சந்தையில் விற்கப்படுவதால்,நம் நாட்டு விவசாயிகளின் நிலை என்ன என்ற ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளது, வாழ்வாதாரம் கேள்விக் குறியாகி உள்ளது. மாநில நிதிகள், ரயில்வே திட்டங்கள் மற்றும் பேரிடர் நிவாரண நிதிகளை வழங்காமல் ஒன்றிய பா.ஜ.க. அரசு நம் மீது பழி



போடுகிறது. பா.ஜ.க.வுடன்,அ.தி.மு.க. உள்ளிட்ட சில கட்சிகள் கூட்டணி வைத்துள்ளது.மக்களுக்கு நாம் எல்லாவற்றையும் எடுத்துக் கூறி புரிய வைக்க வேண்டும்.நம்முடைய சாதனைகளை மறுபடியும் மறுபடியும் எடுத்துச் சொல்ல வேண்டும். தமிழ்நாட்டிற்கு துரோகம் செய்யும் இந்தக் கூட்டணியை மக்கள் மன்றத்தில் தோலுரித்துக் காட்ட வேண்டும்.இவ்வளவு சவாலான சூழ்நிலையிலும் முதலமைச்சர் அவர்கள் ஆட்சி நடத்தி வருகிறார்கள்.

நீங்கள் அத்தனை பேர்களும் உங்கள் பணிகளை சிறப்பாக செய்து வருகிறீர்கள் "ஊர் கூடித் தேர் இழுத்தால் தான் தேர் வரும்" என்ற பழமொழிக்கு ஏற்ப தி.மு.க.வினர் அனைவரும் ஒரே உணர்வோடு ஒற்றுமையாகச் செயல்பட்டு, முதல மைச்சர் அவர்களின் சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்த்தால் வெற்றி நிச்சயம்.

இவ்வாறு கழக துணை பொது செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி.அவர்கள் தெரிவித்தார்.

நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர்கள் அபூபக்கர், கணேசன், கதிர்வேல் முருகன்,ரவிச்சந்திரன் ஒன்றிய செயலாளர்கள், பொறுப்பாளர்கள் சிவனு பாண்டியன் (எ) பரணிசேகர், ஜெகன், முத்து பாண்டி (எ) பிரபு, முத்து கிருஷ்ணன், செல்லத்துரை, சமுத்திரபாண்டியன், சிவக்குமார், குமார், ஜெயக்குமார், மகேஷ் மாயவன்,சிவன் பாண்டியன், பொன்செல்வன், மாரிவண்ணமுத்து

நகர செயலாளர் கணேசன், பேரூர் செயலாளர்கள் நெல்சன், அழகேசன், லஷ்சுமணன்,ஜெகதீசன், முத்துகணேசன், இசக்கி பாண்டி, சுப்பையா, மணிஷா செல்வராஜ், சிந்தா மதார், வானு வாமலை, மணிகண்டன் அணி அமைப்பாளர் கள் மகளிர் அணி சங்கீதா சுதாகர், மகளிர் தொண்டர் அணி திவ்யா மணிகண்டன், வழக்கறிஞர் அணி ஜெ.செல்வசூடாமணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அணி சு.க. நெடுஞ்செழியன், அயலக அணி கா.பீர்முகம்மது, அமைப்புச்சாரா ஓட்டுநர் அணிபிரகாஷ், தகவல் தொழில்நுட்ப அணி பிரேம்ஆனந்த், விளையாட்டு மேம்பாட்டு அணி தவசி மணிகண்டன் மற்றும் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் வேல்முருகன், ஆகாஷ்,ராஜ், பொறியாளர் அணி துணை அமைப்பாளர் மணிகண்டன், மகளிர் அணி துணை அமைப்பாளர் கள் தாமரைச்செல்வி, கஸ்தூரி, கனகமணி கஸ்தூரிபாய்,சரஸ்வதி, சுந்தரி, மல்லிகா, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் கள் நயினார்,பார்வதி ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட துணை செயலாளர் ப.தமயந்தி நன்றியுரையாற்றினார்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் வருமாறு.

முதலமைச்சர், கழகத்தலைவர் அன்புத்தளபதியார் அவர்களுடைய உழைப்பினால் தொழில்துறையில் தமிழ்நாடு முதல் மாநிலமாகவும், பொருளாதார ரீதியாக இரட்டை இலக்கை பெற்று அதிவேக முன்னேற்றமும்,கல்வியில் இந்தியாவில் முதன்மை மாநிலமாகவும் தமிழ்நாட்டின் முன்னேற்றம் இருந்து வருகிறது.

தமிழ்நாட்டின் வளர்ச்சியே மக்களின் வளர்ச்சி தமிழ்நாட்டின் வளர்ச்சியும், மக்களின் வளர்ச்சியுமே தனது குறிக்கோளாகக் கொண்டு உழைத்து வருகின்ற நம் தலைவர் தளபதியார் அவர்கள் உழைப்பால் தேர்தல் அறிக்கையில் கூறிய வாக்குறுதிகளை தொடர்ந்து நிறைவேற்றி வருகிறார்கள். தலைவர் அவர்கள் இரவு,பகல் பாராது கண் துஞ்சாத உழைப்பை தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் முதலமைச்சர் அவர்களை எண்ணி பாராட்டி புகழ்ந்து வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் நிறைவேற்றபடுகின்ற மக்கள் நலத்திட்டங்களை பார்த்து மற்ற மாநிலங்களும் தங்கள் மாநிலங்களில் அந்த திட்டங்களை நிறைவேற்றுவதற்காக முயன்று வருகிறார்கள். இதுபோன்று மாநிலங்களுக்கெல்லாம் உதாரணமாக தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வருகின்ற முதலமைச்சர் அவர்கள் பிறந்தநாள் மார்ச் 1ஆம் தேதி ஆகும்.அன்று அவர்களின் பிறந்தநாளை திருநெல்வேலி மேற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் கழக கொடியேற்றி இனிப்புகள் வழங்கி நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பாக கொண்டாடிட இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

ஒன்றிய அரசு தமிழ்நாட்டை வஞ்சிக்கும் போதெல்லாம், கழகத்தலைவர் அன்புதளபதியார் அவர்களின் எண்ணத்தினை, குரலை நாடாளுமன்றத்தில் பதிவு செய்து ஒன்றிய அரசை கட்டுப்படுத்தி நாடாளுமன்றத்தில் பணியாற்றி வரும் நம் மண்டல பொறுப்பாளர், நாடாளுமன்ற குழு தலைவர், கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்களை இக்கூட்டம் வாழ்த்தி, பாராட்டி வணங்குகிறது.கழக 7வது முறையாக ஆட்சி அமைய தென்மண்டலத்தில் வியூகம் வகுத்து தரும் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களின் வழிகாட்டுதலோடு களப்பணியாற்றி திராவிட மாடல் ஆட்சி 2.0 தொடர அயராது பாடுபட இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' எனப் பதவியேற்பு உறுதிமொழி ஏற்று, இந்த மே மாதம் 7ஆம் நாளிலிருந்து ஐந்து ஆண்டுகளில் நம் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான நமது திராவிட மாடல் அரசு. நம்பிக்கை வைத்து ஆட்சியை ஒப்படைத்த தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்குமான திட்டங்களை வழங்கிடும் நல்லாட்சியை வழங்கி வருகிறது. "வாக்களித்த மக்களுக்கு மட்டுமின்றி,வாக்களிக்காத மக்களும் இவர்களுக்கு வாக்களிக்கத் தவறிவிட்டோமே! என்று நினைக்கக்கூடிய அளவிலான ஆட்சியை வழங்கி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் உழைப்பு! உழைப்பு! உழைப்பு! என பாராட்டு பெற்ற நம் தலைவர் அவர்கள்.. இன்று கலைஞர் அவர்கள் இருந்திருந்தால் தலைவர் அவர்களைப் பற்றி சாதனைகள்!!! சாதனைகள்!!! சாதனைகள்!!! என்று சொல்லுகின்ற அளவிற்கு பாராட்டியிருப்பார்கள். ஆகவே நல்லாட்சி நடத்தி வருகின்ற நம் திராவிடமாடல் முதலமைச்சர் அவர்களை இக்கூட்டம் பாராட்டி வணங்கி போற்றி மகிழ்கிறது. திராவிட மாடல் அரசு, 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற இலட்சியத்துடனான அனைவருக்குமான அரசாகத் திகழ்கிறது.

இந்தியாவின் பிற மாநிலங்களும் - கொள்கை ரீதியாக நமக்கு என்றும் எதிரானவர்கள் ஆள்கின்ற மாநிலங்களும் கூட திராவிட மாடல் அரசின் திட்டங்களைப் பின்பற்றும் வகையில் முன்னோடியான அரசாக முதன்மையான அரசாகத் தமிழ்நாட்டை இந்த ஐந்தாண்டுகளில் உயர்த்தி உள்ளார்கள். ஒன்றிய அரசின் பூச்சாண்டிகளுக்கு மிரள்வதற்கு அடிமைக் கட்சியல்ல, நம் தி.மு.க.இது சுயமரியாதை இயக்கம்.தன்மானமும் தைரியமும் கொண்ட இயக்கம். தமிழ்நாட்டின் உரிமைகளை மீட்டெடுக்கும் இயக்கம். இந்தியாவுக்கு வழிகாட்டும் இயக்கம் திராவிட மாடல் 2.0 ஆட்சி தொடர்ந்திட கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்கள் மூலமாக அம்பாசமுத்திரம், ஆலங்குளம் சட்டமன்ற தொகுதிகளை வென்றெடுப்போம் என சூளுரைத்து திராவிட மாடல் ஆட்சியை நடத்தி வருகின்ற முதலமைச்சர் அவர்கள் "ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும்" என்று களப் பணி ஆற்ற இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

முதலமைச்சர் கழகத்தலைவர் அன்புதளபதியார் அவர்கள் ஆணைப்படி, தென்மண்டல பொறுப்பாளர் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்கள் வழிகாட்டுதலின்படி வருகின்ற 11.02.2026 ஆலங்குளம் சட்டமன்ற தொகுதியிலும் 15.02.2026 அன்று அம்பாசமுத்திரம் சட்டமன்ற தொகுதியிலும் நடைபெற உள்ள "தமிழ்நாடு தலைகுனியாது" பரப்புரை கூட்டங்களில் கழக நிர்வாகிகள் அனைவரும் திரளாக பங்கேற்க இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

முதலமைச்சர் கழகத்தலைவர் அன்புதளபதியார் அவர்கள் சிறப்புரை யின்படி கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மிகச் சீரும் சிறப்புமாக 08.02.2026 அன்று விருதுநகர்,கல்குறிச்சியில் நடைபெற்ற இளைஞரணி தென்மண்டல நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சிகளுக்கு உறுதுணையாக இருந்த ஒன்றிய,நகர,பேரூர் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர், வார்டு இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் இளைஞரணியினரை இக்கூட்டம் பாராட்டுகளை தெரிவிக்கிறது.

முதலமைச்சர் கழகத்தலைவர் அன்புதளபதியார் அவர்கள் ஆணைப்படி, தென்மண்டல பொறுப்பாளர் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்கள் வழிகாட்டுதலோடு வருகின்ற 11.02.2026 முதல் "வெல்லும்தமிழ் பெண்கள்" என்ற பரப்புரையினை

ஆலங்குளம் சட்டமன்ற தொகுதியிலும், அம்பாசமுத்திரம் சட்டமன்ற தொகுதியிலும் நடத்த இக்கூட்டம் தீர்மானிக்கிறது. மகளிருக்கு கழகத்தலைவர் தளபதியார் அவர்களுடைய ஆட்சியில் எண்ணற்ற சாதனைகளை, திட்டங்களை செய்துள்ளார்கள். அவற்றை எடுத்துகூறி இல்லங்கள் தோறும் பரப்புரை மேற்கொள்ள இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

முதலமைச்சர் கழகத்தலைவர் அன்புத்தளபதியார் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி,ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக் கப்பட்டுள்ளதற்கு எதிராக வும் நூறு நாள் வேலையை ஒழிக்கும் சட்டம், விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் என ஒன்றிய நிதி நிலை அறிக்கையில் தமிழ்நாட்டை புறக்கணித்து, தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்து வளர்ச்சியைத் தடுத்து வரும் ஒன்றிய பா.ஜ.க அரசையும் கண்டித்தும் திருநெல்வேலி மேற்கு மாவட்ட தி.மு.க தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி, ஒன்றிய,நகர,பேரூர்கள் சார்பில்,

12.02.2026 - வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெற உள்ளது.

இதில் அந்தந்த பகுதிகளில் உள்ள மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி நிர்வாகிகள்,மாவட்ட தி.மு.க நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள், மாநில அணி நிர்வாகி கள், ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளை நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணிகளின் ஒன்றிய, நகர, பேரூர், நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தோழர்கள் மற்றும் கழகத்தோழர்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு கண்டன முழக்கமிட இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

---

# அந்துமணி சிந்துமணி




**அந்துமணி :** ஏண்டி சிந்து; "பொய்யாலும் விளம்பரத்தாலும் உயர்ந்தவர் வாழ்க்கை நிலைக்காது" என்று எடப்பாடி கூறியிருக்கிறாரே, யாரைப் பற்றி ?

**சிந்துமணி :** **ஆமாண்டி அந்து; இப்படி அவர் தனது மனசாட்சியைத் திறந்து கூறியிருப்பது, கண்ணாடி முன் நின்று கொண்டு தனக்குத் தானே! எடப்பாடி பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்து, புளுகு ராமாயணம் எழுதிய புரட்டு சேக்கிழாரப் புலவர் ஆயிற்றே !**

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மாங்காடு எம்.வி. சோலையப்பன்
### பிப்ரவரி 12 (1972)



**கழகம் துவக்கிய காலத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, பேரறிஞர் அண்ணாவின் அன்பைப் பெற்று, காங்கிரஸ் ஆட்சியில் பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாகி தமது பகுதியில் கழகம் வளர்த்த தளகர்த்தர்களில் ஒருவர்.**

**தலைவர் கலைஞர், பொதுச்செயலாளர் பேராசிரியர் ஆகியோரின் நன்மதிப்பையும் பெற்றவர்.**

**மாங்காடு பேரூராட்சி தலைவராகவும் – குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர். கழகத்தின் முதல் ஒன்றியப் பெருந்தலைவர் என்ற சிறப்பைப் பெற்றவர்.**


**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். தன் இறுதிகாலம் வரை கழகத்திற்காக பாடுபட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருச்சி மா. பாலகிருஷ்ணன்
### பிப்ரவரி 12 (2010)



**பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், பொதுச்செயலாளர் பேராசிரியர் ஆகியோரின் நன்மதிப்பை பெற்றவர்.**

**திருச்சி மாவட்டக் கழகப் பொருளாளராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.**

**புரவலர் அன்பிலாருடன் இணைந்து பணியாற்றி பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**திருச்சி நகர்மன்றத் தலைவராக திறம்பட பணியாற்றி, மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**தி.மு.க. சொத்து பாதுகாப்புக்குழு உறுப்பினராக வாழ்நாளின் இறுதிவரை இருந்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**